# உழவும் தமிழுமே நம் நாட்டின் கண்கள்: கோ.விசயராகவன் பெருமிதம்

கல்பாக்கம், ஜன. 22-

திருவள்ளூர் மாவட்டம் கச்சூர், ஊத்துக்கோட்டையில் செயல்பட்டுவரும் விவேகானந்தா கல்வியியல் கல்லூரியின் பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இந்த விழாவில் கல்லூரி முதல்வர் வெ.ராதிகா அனைவரையும் வரவேற்றார். கல்லூரியின் நிறுவனர் ரங்கநாதன், செயலர் அவந்திகா ராஜேஷ், பள்ளி முதல்வர் சுஃபினா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கல்லூரி முதல்வர் ஆ.முருகன் தலைமையுரையாற்றினார். விழாவில், தமிழ்நாடு அரசு, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக இயக்குனர் கோ.விசயராகவன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்குப் பட்டங்களை வழங்கிச் சிறப்புரையாற்றினார்.



அப்போது அவர் பேசுகையில், ''கல்வியும் கல்வி சார்ந்த ஆய்வுகளும் இன்றைய பொழுதில் அவசியம் முன்னெடுத் தல் வேண்டும். நாகரிக உலகில் எத்தனையோ துறைகளில் தொடர்ந்து புதிய புதிய கண்டுபிடிப்புகள் தோன்றிய வண்ணம் உள்ளன. ஆனால் கலையும், கலை சார்ந்த கல்வியும் பழம்பெருமையை மட்டும் அல்லாமல் ஒரு மொழியின், ஓர் இனத்தின் பண்பாட்டினைப் பல்வேறு கோணங்களில் பறைசாற்றும் வகையில் அமைவதை நாம் காணலாம்.

நீங்கள் சமூகத்தில் ஒரு பட்டதாரியாக, குறிப்பாக, கல்வியியல் பட்டதாரியாக விளங்குவதற்கு அல்லும் பகலும் உழைத்த நம்முடைய கண்கண்ட தெய்வங்களாக விளங்குகிற பெற்றோர்களைப் பேணிக் காக்க வேண்டும். அதன் பிறகு சமூகத்திற்குத் தேவையான தொண்டினை உங்கள் கல்வியால் ஆற்ற வேண்டும். இந்தக் கல்வி என்பது அறியாமை என்ற இருட்டை அகற்றுகிற அகல் விளக்கு. பேரறிஞர் அண்ணா அவர்கள் 'தம்பி உன் வலது கரத்தில் அறிவு விளக்கினை ஏந்தி உயர்த்துக, உலகில் இருக்கின்ற அறியாமை இருட்டு அகலும் வரையில் கரத்தில் ஏந்துக அறிவு விளக்கை' என்று சொல்லுவார். அந்த வகையில் நீங்களும் உங்கள் குடும்பத்திற்கும், உங்கள் குடும்பம் சார்ந்த சமூகத்திற்கும், சமூகம் சார்ந்த நாட்டிற்கும் நீங்கள் பெற்ற கல்வி பயன்படும் வகையில் வாழ வேண்டும். உலகில் எத்தனையோ துறை சார்ந்த விற்பன்னர்கள் இருப்பார்கள். ஆனால் ஆசிரியரின் இடத்தை யாராலும் எளிதாகப் பெற முடியாது. காரணம் எத்தொழில் செய்தாலும் அத்தொழிலில் வரவும் உண்டு, செலவும் உண்டு. ஆனால் ஆசிரியர்களுக்கு மாணவர்கள் ஏதும் தருவதில்லை. ஆனால் அவர்களோ தம் உழைப்போடு அழியாச் செல்வமாகிய அறிவுக்கொடையே வழங்குகிறார்கள்.

அதனால் தான், 'எழுத்தறிவித்தவன் இறைவனாவான்' என்கிறது நறுந்தொகை. பல துறையில் ஆய்வு செய்யும் பொழுது ஒரு முடிவை எதிர்பார்த்து ஆய்வு செய்வார்கள். ஆனால் ஆசிரியரோ, எந்த முடிவையும் பயனையும் எதிர்பார்க்காமல் 'ஆசிரியப் பணி அறப்பணி; அதற்கு உன்னை அர்ப்பணி' என்ற உணர்வோடு அறிவை மக்களுக்கும் மாணாக்கர்களுக்கும் வழங்குவார்கள். இப்பணியில் தொடக்கமோ முடிவோ இல்லை. 'சாந்துணையும் கல்லாத வாறு ' என்ற குறளுக்கேற்பத் தொடர்ந்து வாசிப்பார்கள்.

தொடர்ந்து பேசுவார்கள். எல்லாம் மாணவர்களின் நலத்திற்கு மட்டுமே. அந்த வகையில் நாளைய இளம் தலை முறையினரை வடிவமைக்கும் அறிவு உலைக்களத்தில் கருமானா கத் திகழப் போகிற நீங்கள் பேரறிஞர் அண்ணாவின் கூற்றினை உங்கள் செவிகளிலே நிறுத்திச் செயல்படுங்கள். 'சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை இகல்வெல்லல் யார்க்கும் அரிது ' எனும் திருக்குறளை வகுப்பறையில் எப்பொழுதும் நினைவில் நிறுத்துங்கள். நீங்கள் விளம்பும் சொல் வருங்காலத் தலைமுறையின் வெற்றியை முழங்கட்டும் . நம்நாடு வேளாண்மையை முதன்மைத் தொழிலாகக் கொண்ட நாடு. நம் தாய் மொழியான தமிழோ உலக மொழிகளின் தாயாக விளங்கும் தகைமையது. உழவும் தமிழுமே நம் நாட்டின் இரு கண்கள். உழவும் தமிழும் உயர்ந்தால்தான் நம் நாடு உயரும். எனவே உழவையும் தமிழையும் முன்னேற்றுவதில் இளைய தலைமுறை மாணவர்கள் துடிப்புடன் பங்காற்ற வேண்டும்,'' என்றார்.

# சென்னை லயோலா கல்லூரி பட்டமளிப்பு விழா




சென்னை, ஜன. 22-

சென்னை லயோலா கல்லூரியின், 95வது பட்டமளிப்பு விழாவுக்கு, கல்லூரி முதல்வர் அ.லூயிஸ் ஆரோக்கியராஜ் தலைமை தாங்கினார். லயோலா கல்வி நிறுவனங்களின் அதிபர் அருள், முனைவர் அந்தோணி ராபின்சன், டாக்டர் சார்லஸ் வரவேற்பு நிகழ்த்தினார். செயலர் மற்றும் தாளாளர் முனைவர் ஜெயராஜ் மற்றும் பேராசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், கல்லூரி ஊழியர்கள் என ஏராளமான கலந்து கொண்டனர்.

இதில், 1,907 பேருக்கு இளங்கலை பட்டமும், 547 பேருக்கு முதுகலை பட்டமும், 13 பேருக்கு எம்.பில்., பட்டமும், 64 மாணவர்கள் தங்கப்பதக்கம் என, மொத்தம் 2,550 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன. இதில், 19 பேர் மாற்றுத்திறனாளிகள் ஆவர். இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கிழக்கு மண்டல கடலோர காவல் படை தலைவர் டானி மைக்கேல் கலந்து கொண்டு, மாணவ, மாணவியருக்கு பட்டங்களை வழங்கினார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், ''மாணவர்கள் எந்த சூழ்நிலையிலும் வலிகளை தாங்கிக் கொள்ளக்கூடிய சக்தி வளர்த்துக் கொள்ள வேண்டும். நன்றாக படித்து உயர் பதவிகளுக்கு வர வேண்டும். லயோலா கல்லூரியில் முன்னாள் மாணவன் என்பதில் பெருமை கொள்கிறேன். மாணவர்கள் அந்தந்த சூழ்நிலைக்கு ஏற்றவாறு தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும்,'' என்றார்.

